# 17-05-2024 செய்தி

## ஸ்லோவாக்கியா பிரதமர் மீது துப்பாக்கிச் சூடு

- மத்திய ஐரோப்பிய நாடான ஸ்லோவாக்கியா நீண்ட காலமாக மேற்கத்திய ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துவருகிறது.
- நேட்டோ, ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட அமைப்புகளில் அந்த நாடு அங்கம் வகிக்கிறது.
- எனினும், ரஷியாவை ஆதரிக்கும் இடதுசாரி கட்சியான 'திசை'க்கும் அந்த நாட்டில் செல்வாக்கு உள்ளது.
- அந்தக் கட்சியின் தலைவர் ராபர்ட் ஃபிக்கோ 3-ஆவது முறையாக நாட்டின் பிரதமராக 2023-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ஐரோப்பிய நாடுகளிலேயே ரஷியாவை மிகத் தீவிரமாக ஆதரிக்கும் தலைவராக அறியப்படும் ராபர்ட் ஃபிக்கோ, போரில் உக்ரைனுக்கு ஆயுத உதவிகள் வழங்குவதற்கு எதிராகப் பேசிவந்தார்.
- அவர் ஆட்சிக்கு வந்ததும் அறிவித்த திட்டங்கள் அனைத்தும், ஐரோப்பிய ஆதரவுப் போக்கிலிருந்து ரஷிய ஆதரவுப் போக்குக்கு ஸ்லோவாக்கியாவை இட்டுச் செல்லும் என்று அஞ்சப்பட்டது.
- பிராடிஸ்லாவா நகருக்கு 150 கி.மீ. தொலைவிலுள்ள ஹாண்ட்லோவா நகரில் தனது ஆதரவாளர்களிடையே பிரதமர் ராபர்ட் ஃபிக்கோ உரையாற்றிக் கொண்டிருந்தபோது அவரை நோக்கி ஜீராஜ் சின்டுலா பலமுறை துப்பாக்கியால் சுட்டார்.

## சபாஹார் துறைமுகம்

- ஈரானில் உள்ள சபாஹார் துறைமுகத்தை மேம்படுத்துவதற்காக அந்த நாட்டுடன் இந்தியா மேற்கொண்டிருக்கும் 10 ஆண்டு கால ஒப்பந்தம்.
- இந்தியா-ஈரான் -ஆப்கானிஸ்தானை இணைக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம்.
- ஈரானுடன் தொழில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளும் நாடுகள் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என்கிற அமெரிக்க எச்சரிக்கையையும் மீறி இந்தியா இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டிருக்கிறது.
- தென்கிழக்கு ஈரானில் ஓமன் வளைகுடாவில் சபாஹார் நகரில் ஷாஹித் கலான்டரி, ஷாஹித் பெஹஸ்தி என இரு துறைமுகங்கள் உள்ளன.
- அதில், ஷாஹித் பெஹஸ்தி துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில்தான் இந்தியா போர்ட்ஸ் குளோபல் நிறுவனமும் (ஐபிஜிஎல்), ஈரானிய துறைமுக மற்றும் கடல்சார் நிறுவனமும் (பிஎம்ஓ) கையொப்பமிட்டிருக்கின்றன.
- ஈரானுக்கு பிரதமர் நரேந்தி மோடி 2016-இல் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது இந்த ஒப்பந்தம் செயல்பாட்டுக்கு வந்தது.
- அதன்படி, சபாஹார் துறைமுகத்தில் ஒரு முனையத்தின் இயக்கப் பணிகளை மட்டும் 2016-ஆம் ஆண்டு இறுதியில் இந்தியா ஏற்றது.
- இப்போது சபாஹார் துறைமுக மேம்பாட்டுப் பணிக்கான ஒப்பந்தத்தைச் செய்து கொண்டிருப்பதன் மூலம் 2016-ஆம் ஆண்டு ஒப்பந்தம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.
- இந்த ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பு 37 கோடி டாலராக இருக்கும்.
- புவியியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள சபாஹார் துறைமுகம் மத்திய ஆசியாவுக்கான இந்தியாவின் நுழைவாயிலாகக் கருதப்படுகிறது.
- சபாஹார் நகரையும், ஈரானின் ஷாகிதான் நகரையும் இணைக்கும் 630 கி.மீ. ரயில் பாதை தயாராகி விட்டால், ஈரானின் மத்திய ரயில்வே அமைப்புடன் அது இணைக்கப்பட்டு மத்திய ஆசியாவுக்கும், ரஷியாவுக்கும் சரக்குகளை கொண்டுசெல்ல முடியும்.
- மேலும், பாகிஸ்தானுக்குள் செல்லாமல் சபாஹார் துறைமுகத்திலிருந்து ஆப்கானிஸ்தானை இந்தியா அணுகவும் வழியை ஏற்படுத்திக் கொடுக்கும்.
- கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான் போன்ற நிலத்தால் சூழப்பட்ட மத்திய ஆசிய நாடுகள் சபாஹார் துறைமுகம் வழியாக இந்திய பெருங்கடல் பிராந்தியம் மற்றும் இந்திய சந்தையை அணுக விருப்பம் தெரிவித்து வருகின்றன.
- சபாஹார் துறைமுக ஒப்பந்தத்தை இந்தியா மேற்கொண்டிருப்பது பாகிஸ்தானுக்கும்; அதன் குவாதர் துறைமுகத்தை மேம்படுத்தி வரும் சீனாவுக்கும் கொடுத்துள்ள பதிலடியாகக் கருதப்படுகிறது.

## மியான்மர் எல்லையில் வேலி அமைக்க எதிர்ப்பு

- இந்தியா-மியான்மர் எல்லையில் வேலி அமைக்கும் மத்திய அரசின் முடிவை எதிர்த்து மிசோரம் மாநிலத்தில் நடந்த அமைதிப் பேரணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.
- நம் அண்டை நாடான மியான்மரில் ராணுவ ஆட்சி நடக்கிறது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒரு பிரிவினர் ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

**எதிர்ப்பு**

- நம் நாட்டின் வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சல பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர் மற்றும் மிசோரம் ஆகிய நான்கும் மாநிலங்கள் மியான்மருடன், 1,643 கி.மீ., எல்லையை பகிர்கின்றன.
- இந்த சூழலில், இந்திய - வங்கதேச எல்லையை போன்று, இந்திய - மியான்மர் எல்லையிலும் தடுப்பு வேலிகள் அமைக்கப்படும்.
- முதற்கட்டமாக, மணிப்பூரின் மோரே பகுதியில், 10 கி.மீ., எல்லையில் முள்வேலி கம்பிகள் அமைக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.
- இந்நிலையில், இவ்வாறு வேலி அமைப்பதால், ஏற்கனவே அமலில் இருக்கும் இரு நாட்டு எல்லைகளில் வசிப்பவர்கள் விசா இல்லாமல் 16 கி.மீ., தூரம் பரஸ்பரம் பயணிக்கும் நடைமுறை தடைப்படும் எனக்கூறி, அங்குள்ள பழங்குடியின அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

## பீஷ்ம் மருத்துவமனையை பாராசூட் மூலம் தரையிறக்கியது விமானப்படை

- உத்திரபிரதேச மாநிலம் ஆக்ராவில் அவசர காலங்களில் பயன்படக்கூடிய சிறிய மருத்துவமனையை முதன்முறையாக வெற்றிகரமாக தரையிறக்கி இந்தியவிமானப் படை (ஐஏஎப்) சாதனை படைத்துள்ளது.
- பீஷ்ம் திட்டத்தின் கீழ் சுமார் 720 கிலோ எடை கொண்ட சிறிய மருத்துவமனை 1,500 அடி உயரத்தில் இருந்து பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட பாராசூட் மூலம் உத்தர பிரதேச மாநிலம் ஆக்ராவில் முதன்முதலாக தரையிறக்கப்பட்டு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.
- இதற்காக, இந்திய விமானப் படைக்கு சொந்தமான சி-130 ரக விமானங்கள் பயன்படுத்தப்பட்டன.
- இந்த பாராசூட்களை ஆக்ராவில் உள்ள ஏர் டெலிவரி ரிசர்ச் அண்ட் டெவலப்மெண்ட் எஸ்டாபிளிஸ்மெண்ட் வடிவமைத்துள்ளது.
- பேரிடர் காலங்களில் வெளியில் வர இயலாமல் சிக்கித் தவிக்கும் உயிர்களை காப்பாற்றுவதற்காக இந்த சிறிய மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளது.

**200 பேருக்கு சிகிச்சை....**

- இதன்மூலம் ஆபத்தான நிலையில் இருக்கும் 200 பேருக்கு சிகிச்சை அளிக்க முடியும்.
- ஆபரேஷன் தியேட்டர், எக்ஸ்ரே இயந்திரம், ரத்தப் பரிசோதனை சாதனம், வென்டிலேட்டர், கருவியுடன் துப்பாக்கிச் சூடு, எலும்பு முறிவு, கடுமையான ரத்தக் கசிவு, தீக்காயங்களுக்கு தேவையான சிகிச்சை பொருட்களை இந்த மருத்துவமனை உள்ளடக்கியிருக்கும்.